

# தி.மு.க. இளைஞர் அணி

## மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுச்சேரி, காரைக்கால், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, அந்தமான், மும்பை ஆகிய மாநிலக் கழகங்களுக்கான இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர்காணல் முடிவு மற்றும் உரிய பரிந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள்.**

### புதுச்சேரி

**மாநில அமைப்பாளர் :** லீ.சம்பத், எஸ்–3, 4–வது குறுக்குத் தெரு, ஜெயமூர்த்திராஜா நகர், புதுச்சேரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வீ.தமிழ்ப்ரியன் (எ) அன்பில், 3, ஆற்றங்கரை வீதி, கோணாங்குப்பம், புதுச்சேரி. (2) மு.உத்தமன், 33, பி–7–சி, அங்காளம்மன் கோயில் வீதி, அங்காளம்மன் நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி. (3) வழக்கறிஞர் பி.எம்.ரெமி எட்வின்குமார், 16, வீரராகவ முதலியார் தோட்டம், பள்ளிக்கூட வீதி, கோவிந்த சாலை, புதுச்சேரி. (4) வழக்கறிஞர் ஆ.அகிலன், 21, மாரியம்மன்கோயில் வீதி, காட்டேரிக்குப்பம், புதுச்சேரி. (5) தே.தாமரைக்கண்ணன், 206, புதுநகர், கோவிந்த சாலை, புதுச்சேரி. (6) பா.கிருபாசங்கர், 2, 5–வது குறுக்குத் தெரு, வேல் முருகன் நகர், கொசப்பாளையம், புதுச்சேரி. (7) ஜெ.சந்துரு, 44, செல்லபெருமாள் கோயில் வீதி, குயவர்பாளையம், புதுச்சேரி. (8) ப.பஜுலுதீன், 4, பழைய மேட்டுத் தெரு விரிவு, ரஹமத் நகர், சுல்தான்பேட்டை, புதுச்சேரி. (9) ரொ.நித்தின் திமோத்தி, 3, அருளானந்தம் வீதி, கோலாஸ் நகர், புதுச்சேரி. (10) முகிலன் அல்லிமுத்து, 48, கே.டி.குப்பம்பேட் ரோடு, கலிதீர்த்தாள்குப்பம், புதுச்சேரி.

### காரைக்கால்

**மாநில அமைப்பாளர் :** மு.முஹம்மது ரிஃபாஸ், 104, காமராஜ் சாலை, காரைக்கால்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.பாலசந்தர், 15, வடக்குத் தெரு, முப்பயித்தங்குடி, செல்லூர், திருநள்ளார், காரைக்கால். (2) தி.சுப்பிரமணிய பிரபாகரன், 68/1, அம்மன்கோயில் வீதி, திருப்பட்டினம், கீழையூர், காரைக்கால். (3) மு.முகமது ஹாரிஸ், 2, மூன்றாவது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், காரைக்கால். (4) அ.ராம்பிரசாத், 34, காமராஜர் சாலை, காரைக்கால். (5) அ.சுரேஷ்குமார், 7, மேரி தெரு, பொன்பேத்தி, நெடுங்காடு, காரைக்கால். (6) வெ.வெற்றிச்செல்வன், 54, சுனாமி நகர், காரைக்கால்.

### கேரளா

**மாநில அமைப்பாளர் :** ரா.பிரின்ஸ், 27/215, அஞ்சலிமுட்டம், சிராக்குளம் ரோடு, கேரளா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.மது, 30–ஏ, ஆத்மிகா, வடக்கேபுரம் ரோடு, களமச்சேரி, எர்ணாகுளம், கேரளா. (2) விபின் முருகேசன், என்.எம்.சி 26/322, பிரியதர்சினி நகர், நெடுமாங்காடு, திருவனந்தபுரம், கேரளா. (3) ஆர். ஹரிகுமார், டிசி–23/1380, மேலரனூர், கரமனை (அ) திருவனந்தபுரம், கேரளா. (4) ஆலன் டேவிட், ஸாரோன், கரம்கோட்டுக் கோனம், பெயாட் போஸ்ட், திருவனந்தபுரம், கேரளா. (5) மோ.பிரவீன்ராஜ், கோவில் தெரு, இக்கா நகர், மூணார், இடுக்கி, கேரளா.

### கர்நாடகா

**மாநில அமைப்பாளர் :** த.சிவமலை, 19, பி.பி.டி. தெரு 2– வது கிராஸ், முல்பேட், பெங்களூரு, கர்நாடகா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.முருகானந்தன், 61, 4–வது குறுக்குத் தெரு, 22–வது மெயின் ரோடு, கேம்பே கௌடா லே–அவுட், பெங்களூரு, கர்நாடகா. (2) மு.ராஜசேகர், 41, 2–வது குறுக்குத் தெரு, 3–வது பிளாக், தியாகராஜ் நகர், பெங்களூரு, கர்நாடகா. (3) அ.லியோராஜன், 244, 8–வது சாலை, லட்சுமணன்ராவ் நகர், கொரமங்களா, பெங்களூரு, கர்நாடகா. (4) ஐ.முகமது ஆரிஃப், 278, 2–வது குறுக்குத் தெரு, செலிபிரிட்டி லே அவுட், பெங்களூரு, கர்நாடகா. (5) ந.விக்ரம், 3, முதல் தெரு, 2–வது சந்து, சஞ்சய்காந்தி நகர், பெங்களூரு, கர்நாடகா. (6) த.விகாஸ், பொம்மாஹாளி, கணேசா கோவில், பிஜஓர் ரோடு, பெங்களூரு, கர்நாடகா.

### ஆந்திரா

**மாநில அமைப்பாளர் :** நா.வெங்கடேசுலு, 1–59, குமரிதெரு, சிந்தாலப் பேட்டை, நகரி, சித்தூர், ஆந்திரா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கே.எம்.கருணாநிதி, 5–1–191– கோதண்டராமர் கோவில் தெரு, ஏகாம்பரக்குப்பம், நகரி. சித்தூர், ஆந்திரா. (2) வெ.லோகநாதன், 5/26, காமராஜர் தெரு, ஏகாம்பரக்குப்பம், ஆந்திரா. (3) ச.ஆரிஃப் முகம்மது, 9–113, ஆடம் காலனி, நகரி போஸ்ட், சித்தூர், ஆந்திரா. (4) எஸ்.எஸ்.ஹேமச்சந்திரன், 5–2–22, கே.ஆர் கோயில் தெரு, ஏகாம்பரக்குப்பம், சித்தூர், ஆந்திரா. (5) பி.ஜி.என்.சம்பத், 11/1, 2வது கைனிக்கட்டு தெரு, சிந்தாலப் பேட்டை, நகரி, ஆந்திரா.

### அந்தமான் நிகோபார் தீவுகள்

**மாநில அமைப்பாளர் :** இரா.ராஜா, 1, அந்தமான் தமிழர் சங்கம் காம்ப்ளெக்ஸ், எம்.ஏ.ரோடு, அந்தமான் தீவுகள்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.ஜாஹிர் உசேன், பிளாக் 3 , கடை 5 , காந்தி மார்க்கெட், அந்தமான் தீவுகள். (2) ம.விஜயகுமார், டி.டி.ஐ காலேஜ் ரோடு, கரசெர்மா. போர்ட்ஃபிளேயர், அந்தமான் தீவுகள். (3) டி.சுரேஷ்குமார், சி–41–1, டி.டி தெரு, ஹைடு, போர்வெல், அந்தமான் நிகோபார் தீவுகள். (4) ச.கார்த்திக், லம்பாலயன், ராஞ்சி பஸ்தி, சிவன் கோவில் அருகில், டைரி பார்ம், ஜங்லிகாட் போஸ்ட், அந்தமான் தீவுகள். (5) சி.ஸ்ரீகார்த்திக், கோகுலம் ஸ்டோர், கரசெர்மா, போர்ட்ஃபிளேயர், அந்தமான் தீவுகள்.

### மும்பை

**மாநில அமைப்பாளர் :** ந.வசந்தகுமார், ஏ–5, பிளாட் 203, 2–வது தளம், மானசரோவர், பிவண்டி, மும்பை, மகாராஷ்டிரா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இரா.கணேசன், பில்டிங்–சி–2, பிளாட்–603, மானசரோவர், பிவண்டி, மும்பை, மகாராஷ்டிரா. (2) பா.உதய்குமார் பாலமுருகன், 102, சஹ்யாத்ரி நிவாஸ், கிசான் நகர், வாக்லே எஸ்டேட், தானே, மகாராஷ்டிரா. (3) கி.வீரமணி, 21–ஸ்ரீநகர், வாக்லே எஸ்டேட், தானே, மகாராஷ்டிரா. (4) அமரன் உத்தமன், 14, ஸ்கூல் காம்பவுன்ட், குர்லா அந்தேரி சாலை, மும்பை– 460 072. (5) சீ.அறிவழகன், 361, இந்திரா நகர், மும்பை கிழக்கு.

‘அன்பகம்’
சென்னை – 18
நாள் : 19–07–2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள “Health Walk” திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை நகராட்சி, திலகர் திடலிலிருந்து, மாலையீடு, விளாக்குடி பேருந்து நிறுத்தம் வரையில் நேற்று (19.07.2023) சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

# திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரியில் இரத்ததான முகாம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூலை 20 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கூட்டுறவு வீட்டுவசதித்துறையின் சார்பில் திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற இரத்ததான முகாம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கூட்டுறவு வீட்டு வசதித் துறையின் சார்பில் திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற இரத்ததான முகாம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் 14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில், துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கூட்டுறவு வீட்டுவசதித்துறையின் சார்பில் திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரியில் இரத்ததான முகாம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழாவினை துவக்கி வைக்கப்பட்டது. நம்முடைய இதயத்தில் நிலைத்து நின்று வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, காங்கேயம் கார்மல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் மூலனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவகம் நடத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு 4வது முறையாக பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருந்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல் கிராமப்புறங்களுக்கு சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடியாதவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் சிறப்பாக பயன்பட்டு வருகிறது. நோய் ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த திட்டமாக உள்ளது.

இந்த மருத்துவமுகாமில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத் தின் மூலம் சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களில் பாதிக்கப்பட்டவர்களின் இல்லத்திற்கே சென்று மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோர் சிகிச்சை அளிக்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 என்ற திட்டத்தினை செங்கல்பட்டு மாவட்டத்தில் துவக்கி வைத்தார்கள். அந்த வகையில் சாலை விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுக்கும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வகுக்கப்பட்ட உன்னத திட்டம் இன்னுயிர் காப்போம் திட்டம். விபத்து நடந்த உடன் எவ்வித தாமதம் இல்லாமல் விபத்தில் சிக்கயவரை சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதும் அவர்களுக்கு உடனடி சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 மணி நேரம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாலை விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு முதல் 48 மணிநேரத்தை முக்கியமாக கருதி இத்திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பரமணியன், ஆண்டிபாளையம் பகுதி கழகச் செயலாளர் வைஸ் பி.முருகசாமி, வட்டக் கழக செயலாளர்கள் தண்டபாணி, தேனா சீனிவாசன், விவேகானந்தன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி, மோட்டார் தொழிலாளர் அணி அமைப்பாளர் திருப்பூர் பொ.ஆனந்தன், தமிழரசு, தம்பி சாமிநாதன், மகளிர் அணி விஜயா, மாமன்ற உறுப்பினர் சாந்தாமணி முருகசாமி, துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) கோவை மண்டலம் அர்த்தநாரீஸ்வரன், திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரி தலைவர் மற்றும் தாளாளர் ரேணுகாதேவி, திருப்பூர் கூட்டுறவு வீட்டுவசதி சங்க செயலாளர் முத்துர த்தினம், திருப்பூர் குமரன் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர்.வசந்தி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னிமலை ஒன்றியம் பேரூராட்சி பகுதிகளில்

# ரூ.21.54 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சித்திட்டப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூலை 20 -

ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னிமலை ஒன்றியம் மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.21.54 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளரச்சி திட்டப்பணிகள் சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், சென்னிமலை ஒன்றியம், குப்பிச்சிபாளையம் ஊராட்சியில் ரூ.82.12 இலட்சம் மதிப்பீட்டில் தலவமலை முதல் நொய்யல் வரை உள்ள சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும், முகாசிபிடாரியூர் ஊராட்சியில் ரூ.111.91 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை ஊத்துக்குளி சாலை முதல், கொளத்துப்பாளையம் விஜயமங்கலம் ஆர்.எஸ். இணைப்பு சாலை வரையிலான சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும், எக்கட்டாம்பாளையம் ஊராட்சியில் ரூ.33.08 இலட்சம் மதிப்பீட்டில் வெப்பிலி முதல் புதுவலசு வரையிலான சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும், முகாசிபிடாரியூர் ஊராட்சியில் ரூ.38.32 இலட்சம் மதிப்பீட்டில் கோவில்பாளையம் முதல் அத்தனூர் அம்மன் கோவில் வழியாக ஈஸ்வரன் கோவில் வரையிலான சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும், புஞ்சை பாலத்தொழுவு ஊராட்சியில் ரூ.19.07 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை ஊத்துக்குளி சாலை முதல் ஓலப்பாளையம் (வழி) காசிபாளையம் வரையிலான சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும் மற்றும் புஞ்சை காலத்தொழுவு ஊராட்சியில் ரூ.38.93 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை ஊத்துக்குளி சாலை முதல் நஞ்சுண்டாபுரம் வரையிலான சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினையும் என ரூ.323.43 இலட்சம் மதிப்பீட்டிலான சாலைகள் மேம்பாடு செய்யும் பணிகளையும்,

தொடர்ந்து சென்னிமலை பேரூராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையினை நிறைவேற்றும் வகையில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.18.13 கோடி மதிப்பீட்டில் அனைத்து வார்டுகளிலும் பைப்லைன் 53 கி.மீ விரிவாக்க பணிகள், காமராஜர் நகர் பகுதியில் சுமார் 60,000 லிட்டர் மற்றும் மணிமலைக்கரடு பகுதியில் 1.50 இலட்சம் லிட்டர் என 2 எண்ணிக்கையில் மேல்நிலை தொட்டிகள் மற்றும் வாரச்சந்தையில் 2.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சம்ப் அமைத்தல் ஆகிய பணிகளையும் துவக்கி வைத்து, வளர்ச்சித்திட்டப்பணிகளை விரைவாக முடித்து, விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். வார்டு எண் 4 கே.வி.பி.நகர் அம்மாபாளையம் பகுதியில் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்காவினையும் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர், சென்னிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், சென்னிமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.பிரபு, பேரூர் கழக செயலாளர் எஸ்.எம்.ராமசாமி, ஒன்றியப் பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, துணைத் தலைவர் பன்னீர் செல்வம், சென்னிமலை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் கொடுமணல் கோபால், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் கலைவாணி டி.ஜி.தங்கமுத்து, மாவட்ட காலை இளகிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் தி. சேகர், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கே.எஸ்..ராஜேந்திரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் தென்றல் எஸ்.ரமேஷ், பேரூராட்சித் தலைவர் ஸ்ரீதேவி அசோக், ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கமணி விஜயகுமார், தங்கவேல், இளங்கோ, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சதீஷ் (எ) சுப்பிரமணியம், மணிமேகலை விஸ்வநாதன், குருசாமி, சந்திரமோகன், பி.எஸ்.அங்கப்பன், அன்பழகன், மோகன்குமார், குமாரபுரி ஆறுமுகம், சசிகுமார், எம்.பி. மனோகரன், சென்னிமலை வட்டாட்சியர் பூபதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குணசேகரன், பாஸ்கர் பாபு, சென்னிமலை பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயராமன் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி மற்றும் வனத்துக்குள் திருப்பூர் அமைப்புடன் இணைந்து பசுமை மாநகராக திருப்பூர் அமைந்திட ‘கடம்ப வனம்’ திட்டத்தின் கீழ், திருப்பூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் 75,000 மரங்கள் நடும் முன்னெடுப்பின் முதற்கட்டமாக 43வது வார்டு, நடராஜ் தியேட்டர் சாலை ஆலாங்காடு பிரிவு அருகில் புதிய பூங்கா அமைக்கவும், 250 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், திருப்பூர் தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், பகுதி செயலாளர்கள் மியாமி அய்யப்பன், மு.க.உசேன், முருகசாமி உள்பட வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.